**மீகஹகிவுல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, மீகஹகிவுல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) இறுதி இருப்புக்களின் மதிப்பீடு, விலையிடல் மற்றும் கணக்கீட்டிற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டு நடைமுறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 833,000 பெறுமதியான நிலையான வைப்புக்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 798,968 தொகை நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 21,300 தொகையான மீளாய்வாண்டுடன் தொடர்புடைய 12 உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்கள் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம், உபகரணம் மற்றும் தளபாடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 129,320 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணங்களிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடன்கொடுத்தோர்களிற்கான ஒதுக்கீடு ரூபா 1,793,858 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) ரூபா 385,534 மீதிகளை தொங்கல் கணக்கு மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பொது வைப்புக்களிலுள்ள மீதிகள் ரூபா 1,228,859 ஆகவிருந்த போதும் பொது வைப்புக்களின் பதிவேட்டின் பிரகாரம் இந்த மீதி ரூபா 973,215 ஆகவிருந்தது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

திசம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 14,695,222 மற்றும் ரூபா 7,275,280 தொகையான முறையே பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 103,885,102 பெறுமதியான ஏழு கணக்கு விடயங்களானது தேவையான தகவல்கள் இன்மையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபை அதிகாரச்சட்டத்தின் 132(அ) மற்றும் (ஈ) பிரிவு | சபையின் நிதியத்திலிருந்து ரூபா 167,725 கூட்டுத்தொகையான செலவினம் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் செலவழிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| | (i) 5(7) ஆம் விதி | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 217 மற்றும் 218 ஆம் விதிகள் | காணிகள் மற்றும் கட்டிடங்களிற்கான பொருள் மெய்மையாய்வு நடைபெற்றிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 | 02 கிராமிய அபிவிருத்தி சமூகங்களிற்கு 05 சந்தர்ப்பங்களில் ரூபா 494,051 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் முற்பணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வர்த்தமானி அறிவித்தல் | |
| | (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய 2361 ஆம் இலக்க வர்த்தமானி | ஐந்து நிலைமாற்றி கோபுரங்கள் மீதான 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 15,000 வருடாந்த கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 08 இன் 1946 ஆம் இலக்க வர்த்தமானி | 14 விளம்பர பலகைக்கான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | திறைசேரி ஏற்பாடுகள் | |
| | 2009 ஏப்ரல் 16 இன் 09/2009 மற்றும் 09/2009(i) இலக்க அரச | சபை உத்தியோகத்தர்களின் வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்கள் கைவிரல் அடையாள |

| | |
|---|---|
| நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் ஊவா மாகாண செயலாளரின் 2016 செப்தெம்பர் 23 இன் 3/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | இயந்திரத்தை பயன்படுத்துவதால் நீரூபிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,537,026 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,338,210 ஆகவிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமான நிலுவை ரூபா 994,229 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 798,432 மற்றும் 28 சதவீதம் நிலுவையாகவிருந்தது.

#### 2.3.2 வியாபார கடைகளிற்கான வாடகை

22 வியாபார கடைகளிற்கான உடன்படிக்கைகளானது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட புதிய மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அத்தகைய வியாபார கடைகளிற்கான வாடகை 2010 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டமையால் வாடகையானது ரூபா 198,075 ஆல் குறைத்து அறவிடப்பட்டிருந்தது

#### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடருந்து ரூபா 2,350,000 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெறவேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையீன்மைகள்

04 முச்சக்கரவண்டி தரிப்பிடங்களிலிருந்து 104 பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளிற்கான கட்டணங்கள் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையீன்மைகள்

ரூபா 5,060,176 ஐ செலவழிப்பதன் மூலம் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ஆறு நிர்மாண வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தும் சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் மற்றும் டொலமைற் செயற்திட்டத்தின் கட்டிடம் 5 தொடக்கம் 18 வருடங்கள் வீச்சிலான காலப்பகுதிக்காக விளைவற்றிருந்தது.

**3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்**

சபையால் சேகரிக்கப்பட்ட குப்பையானது திண்ம கழிவு முகாமைத்துவத்தை அமுல்படுத்துவதற்கு பதிலாக சபையின் 10 மைல்கல்களிலுள்ள திறந்த மலைப் பிரதேசத்தில் போடப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டமானது நடைபெற்றிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை அமுல்படுத்தல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வாகனங்கள் மீதான கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள்
(உ) களஞ்சிய முகாமைத்துவம
(ஊ) முற்பணங்களை வழங்கல்